பிரஸார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை - 4

**05 12 2025** **FRIDAY** **6.30 PM**

மாநிலச் செய்திகள்

தலைப்புச் செய்திகள்

**1)** கூட்டுறவு டாக்சி மற்றும் காப்பீடு சேவை விரைவில் அறிமுகப்படுத்தப்பட உள்ளதாக மத்திய அமைச்சர் திரு அமித் ஷா அறிவித்துள்ளார்.

**2)** திருப்பரங்குன்றத்தில் தீப வழிபாடு மறுக்கப்பட்டதன் மூலம் உயர்நீதிமன்றத்தின் தீர்ப்பு மீறப்பட்டுள்ளதாக மத்திய இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் குறை கூறியுள்ளார்.

**3)** பொங்கல் பண்டிகையையொட்டி, தரமான வேட்டி-சேலைகள் விநியோகம் செய்யப்படுவது உறுதி செய்யப்படும் என்று தமிழக அரசு தெரிவித்துள்ளது.

**4)** தமிழகத்தில், **99** புள்ளி எட்டு ஒன்று சதவீத வாக்காளர் கணக்கீட்டு படிவங்கள் விநியோகிக்கப்பட்டுள்ளதாக தேர்தல் ஆணையம் கூறியுள்ளது.

**5)** சென்னை சர்வதேச ஸ்குவாஷ் போட்டியில் இந்தியாவின் வேலவன் செந்தில்குமார் மற்றும் அனாகத் சிங் பட்டம் வென்றனர்.

- இனி விரிவான செய்திகள் ---

<<<<<<>>>>>>

கூட்டுறவுத்துறை சார்பில் விரைவில் டாக்சி சேவை தொடங்கப்பட உள்ளதாக அத்துறைக்கான அமைச்சர் திரு அமித் ஷா கூறியுள்ளார்.

குஜராத் மாநிலம் காந்தி நகரில் நிகழ்ச்சி ஒன்றில் பேசிய அவர், கூட்டுறவு காப்பீடும் அறிமுகப்படுத்தப்பட உள்ளதாக தெரிவித்தார்.

ஊரக பொருளாதாரத்தை வலுப்படுத்தாமல் வளர்ச்சியடைந்த இந்தியாவுக்கான இலக்குகளை எட்ட முடியாது என்பதை கருத்தில்கொண்டு கூட்டுறவுத்துறை வளர்ச்சிக்கு மத்திய அரசு கூடுதல் முக்கியத்துவம் அளித்துள்ளதாக அவர் தெரிவித்தார்.

கூட்டுறவுத்துறையின் வளர்ச்சி ஊரக பொருளாதாரம் மற்றும் வேளாண் வளர்ச்சியை உறுதி செய்யும் என்றும் திரு அமித் ஷா தெரிவித்தார்.

<<<<<<>>>>>>

திருப்பரங்குன்றத்தில் தீப வழிபாடு மறுக்கப்பட்டதன் மூலம் உயர்நீதிமன்றத்தின் தீர்ப்பு மீறப்பட்டுள்ளதாக மத்திய இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் குறை கூறியுள்ளார்.

இன்று மக்களவையில் திமுக உறுப்பினர்கள் இதுகுறித்த பிரச்சினையை எழுப்பியபோது குறுக்கிட்டு பேசுகையில் அவர் இவ்வாறு கூறினார்.

***(Sound Byte — எல். முருகன் (1) - 50 Sec.)***

வாக்கு அரசியலுக்காக மக்களுக்கு எதிராக திமுக அரசு செயல்படுவதாகவும், இது கண்டிக்கத்தக்கது என்றும் டாக்டர் எல். முருகன் தெரிவித்தார்.

***(Sound Byte — எல். முருகன் (2) - 48 Sec.)***

<<<<<<>>>>>>

திமுக அரசு சர்வாதிகார போக்கோடு செயல்படுவதாக பிஜேபி மாநிலத்தலைவர் திரு நயினார் நாகேந்திரன் குற்றம் சாட்டியுள்ளார்.

இதுதொடர்பாக சமூக வலைதளத்தில் அவர் விடுத்துள்ள செய்தியில், திருப்பரங்குன்றத்தில் தீபம் ஏற்றுவது தொடர்பான பிரச்சினையில் நீதிமன்ற உத்தரவையும் மதிக்காமல் திமுக அரசு செயல்படுவதாக குறிப்பிட்டுள்ளார்.

இதுதொடர்பான செய்தி வெளியிட்ட நாளிதழுக்கு எதிராக மிரட்டல் விடுக்கும் வகையில் சட்ட அமைச்சர் திரு ரகுபதி சமூக வலைதளத்தில் கருத்தினை பதிவு செய்திருப்பது கண்டனத்திற்குரியது என்றும் அவர் கூறியுள்ளார்.

இதுபோன்ற செயல்பாடுகள் ஏற்புடையது அல்ல என்றும், சட்டப்பேரவைத் தேர்தலில் மக்கள் இதற்கு உரிய பதில் கொடுப்பார்கள் என்றும் திரு நயினார் நாகேந்திரன் தெரிவித்துள்ளார்.

<<<<<<>>>>>>

பொங்கல் பண்டிகையையொட்டி, தரமான வேட்டி-சேலைகள் விநியோகம் செய்யப்பட வேண்டும் என்பதில் தமிழக அரசு உறுதியாக உள்ளதாக கைத்தறித்துறை அமைச்சர் திரு காந்தி கூறியுள்ளார்.

இதுதொடர்பாக இன்று அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், இதில் சமரசம் என்ற பேச்சுக்கே இடமில்லை என்றார்.

<<<<<<>>>>>>

தமிழகத்தில், வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தப் பணிகளின் கீழ், இதுவரை 99 புள்ளி எட்டு ஒன்று சதவீத விண்ணப்பப் படிவங்கள் விநியோகிக்கப்பட்டுள்ளதாக தேர்தல் ஆணையம் கூறியுள்ளது.

இதன்படி, 6 கோடியே, 39 லட்சத்து 95 ஆயிரத்து 854 விண்ணப்பங்கள் விநியோகிக்கப்பட்டுள்ளதாக தேர்தல் ஆணையத்தின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

இதில், 98 புள்ளி இரண்டு மூன்று சதவீத விண்ணப்பங்கள் டிஜிட்டல் மயமாக்கப்பட்டுள்ளதாகவும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதற்கிடையே, கிருஷ்ணகிரி மாவட்டத்தை சேர்ந்த வாக்காளர்கள் தங்களது கணக்கீட்டு படிவங்களை சம்பந்தப்பட்ட வாக்குச்சாவடி

நிலை அலுவலரிடம் ஒப்படைக்குமாறு ஆட்சியர் திரு தினேஷ்குமார் எமது செய்தியாளரிடம் தெரிவித்தார்.

*(Sound Byte — ஆட்சியர் தினேஷ்குமார் - 48 Sec. )*

<<<<<<>>>>>>

முன்னாள் முதலமைச்சர் ஜெயலலிதாவின் **9-**ஆம் ஆண்டு நினைவு தினம் இன்று அனுசரிக்கப்பட்டது.

இதனையொட்டி, அக்கட்சியின் பொதுச்செயலாளர் திரு எடப்பாடி பழனிசாமி தலைமையில் அக்கட்சியினர் சென்னையில் உள்ள ஜெயலலிதா நினைவிடத்தில் மலர் தூவி மரியாதை செலுத்தினர்.

மாநிலம் முழுவதும் அஇஅதிமுக சார்பில் பல்வேறு நிகழ்ச்சிகளும் நடைபெற்றன.

<<<<<<>>>>>>

மண்வளத்தை பாதுகாப்பதற்காக மத்திய அரசு பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருகிறது.

சர்வதேச மண் வள தினம் இன்று கொண்டாடப்படுவதையொட்டி, சேலத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் பங்கேற்ற அம்மாவட்ட வேளாண் இணை இயக்குனர் திரு சீனிவாசன் பின்னர் எமது செய்தியாளரிடம் பேசினார்.

மண்வள பாதுகாப்பு திட்டம் மூலம் சேலம் மாவட்டத்தை சேர்ந்த ஆயிரக்கணக்கான விவசாயிகள் பயனடைந்து வருவதாக அப்போது அவர் கூறினார்.

***(Sound Byte — சீனிவாசன் - 35 Sec. )***

<<<<<<>>>>>>

தென்காசி, திருநெல்வேலி மாவட்டங்களுக்கு உட்பட்ட ஒரு சில பகுதிகளில் அடுத்த 24 மணிநேரத்தில் கனமழைக்கு வாய்ப்புள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மைய இயக்குனர் திரு செந்தாமரை கண்ணன் தெரிவித்துள்ளார்.

எமது செய்தியாளரிடம் பேசகையில் அவர் இவ்வாறு கூறினார்.

***(Sound Byte — செந்தாமரை கண்ணன் - 28 Sec.)***

<<<<<<>>>>>>

*மாவட்டச் செய்திகள்*

நாகை மாவட்டத்தில் மண்வளம் பாதுகாக்க வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தும் வகையில் மாணவர்கள் பங்கேற்ற விழிப்புணர்வு பேரணி இன்று நடைபெற்றது.

-----------------

கோவையில் உள்ள வேளாண் பல்கலைக்கழகத்திலும் மண்வள தின விழிப்புணர்வு பேரணி இன்று நடைபெற்றது.

--------------

நீலகிரி மாவட்டம் உதகமண்டலத்தில் உள்ள மரவியல் பூங்கா வளாகத்தில் **40** லட்சம் ரூபாய் செலவில் வளர்ப்பு நாய்களுக்கான பராமரிப்பு பூங்கா அமைக்கப்பட்டு வருகிறது.

<<<<<<>>>>>>

***விளையாட்டுச் செய்திகள்***

சென்னை சர்வதேச ஸ்குவாஷ் போட்டியில் இந்தியாவின் வேலவன் செந்தில்குமார் மற்றும் அனாகத் சிங் பட்டம் வென்றனர்.

ஆடவர் ஒற்றையர் பிரிவு இறுதியாட்டத்தில் வேலவன் செந்தில்குமார், **11-7, 11-9, 9-11, 11-4** என்ற செட் கணக்கில், எகிப்தின் **Adam Hawal-**ஐ வென்றார்.

மகளிர் ஒற்றையர் பிரிவு இறுதியாட்டத்தில் அனாகத் சிங், **11-8, 11-13, 11-13, 11-6, 11-8** என்ற செட் கணக்கில், இந்தியாவின் ஜோஸ்னா சின்னப்பாவை வென்றார்.

--------------

குவஹாத்தி மாஸ்டர்ஸ் பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் **Tushar Suveer** அரையிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

ஆடவர் ஒற்றையர் பிரிவு காலிறுதி ஆட்டத்தில் அவர், **21-14, 21-11** என்ற செட் கணக்கில், இந்தோனேஷியாவின் **Muhamad Yusuf-**ஐ வென்றார்.

மகளிர் ஒற்றையர் பிரிவில் தன்வி சர்மாவும், கலப்பு இரட்டையர் பிரிவில் ரோஷன் கபூர் — ருத்விகா ஷிவானி இணையும் அரையிறுதிக்கு தகுதி பெற்றுள்ளது.

**<<<<<END>>>>>**